RNI-NO: TNTAM/2021/83936




# மாலை தந்தி
MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

www.malaithanthi.in

DAILY EVENING

மாலை நாளிதழ்

Postel Regd. No: TN/5/SVA/2023-2025




சிவகங்கை | மலர்-5 | இதழ்- 289 | அக்டோபர் 22, 2026 வியாழக்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ.5

# பணியின்போது உயிரிழந்த காவலர்களின் குடும்பங்களுக்கு காப்பீட்டுத் தொகை: முதல்-அமைச்சர் விஜய் வழங்கினார்

சென்னை, அக்.22-

பணியின்போது உயிர் நீத்த காவலர்களின் குடும்பங்களுக்கு ரூ.5.96 கோடி காப்பீட்டுத்தொகையை முதல்-அமைச்சர் விஜய் வழங்கினார்.

அக்டோபர் 21ம் நாள் ஆண்டுதோறும் காவலர் வீரவணக்க நாளாக நாடு முழுவதும் கடைப்பிடிக்கப்பட்டு வருகிறது. 1959ம் ஆண்டு இதே நாளில் (21ம் தேதி) லடாக் பகுதியில் சீன ராணுவத்தினர் மறைந்திருந்து நடத்திய திடீர் தாக்குதலில் 10 மத்திய பாதுகாப்பு படைக்காவலர்கள் உயிரிழந்தனர். இத்தாக்குதலில் வீரமரணம் அடைந்த காவலர்களின் தியாகத்தை நினைவுக்கூரும் வகையில் காவலர் வீரவணக்க நாள் ஆண்டு தோறும் அனுசரிக்கப்படுகிறது. காவலர் வீரவணக்க நாளை முன்னிட்டு, காவலர் நினைவுச் சின்னம் முன்பாக மலர்வளையம் வைத்து மரியாதை செலுத்தி, பணியின்போது உயிரிழந்த காவலர்களின் குடும்பங்களுக்கு ரூ.5.96 கோடி காப்பீட்டுத் தொகைக்கான ஆணைகளை தமிழ்நாடு முதல்-அமைச்சர் ச.ஜோசப் விஜய் வழங்கினார்.

இதுதொடர்பாக வெளியிடப்பட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளதாவது:- தமிழ்நாடு முதல்-அமைச்சர் ச.ஜோசப் விஜய் அவர்கள் இன்று (21.10.2026) சென்னை, காவல்துறை தலைமை அலுவலக வளாகத்தில் காவலர் வீரவணக்க நாளை முன்னிட்டு நடைபெற்ற நிகழ்ச்சியில், வீரமரணம் அடைந்த காவலர்களைக் கௌரவிக்கும் வகையில் காவலர் நினைவுச் சின்னம் முன்பாக மலர்வளையம் வைத்து மரியாதை செலுத்தினார்.

பின்னர் தமிழ்நாடு காவல்துறையில் பணிபுரிந்து, பணியின்போது உயிரிழந்த 6 காவலர்களின் குடும்பங்கள் மற்றும் கோமா நிலையிலுள்ள ஒரு காவலர் என மொத்தம் 7 காவலர்களின் குடும்பங்களுக்கு, தமிழ்நாடு அரசின் சம்பளத் தொகுப்புத் திட்டத்தின்கீழ் தனிநபர் விபத்துக் காப்பீட்டுத் தொகையாக மொத்தம் 5 கோடியே 96 லட்சம் ரூபாய்க்கான ஆணைகளை வழங்கினார். இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.




## மீனாட்சி மிஷன் மற்றும் மீனாட்சி சூப்பர் ஸ்பெஷாலிட்டி மருத்துவமனைகளின் வரலாற்றுச் சாதனை: 500 ரோபோட்டிக் அறுவை சிகிச்சைகள் நிறைவு

மதுரை, அக்.22-

மீனாட்சி மிஷன் மருத்துவமனை மற்றும் ஆராய்ச்சி மையம் மற்றும் மீனாட்சி சூப்பர் ஸ்பெஷாலிட்டி மருத்துவமனை ஆகியவை கடந்த 10 ஆண்டுகளில் 500 ரோபோட்டிக் அறுவைசிகிச்சைகளைச் செய்து புதிய மைல்கல்லை எட்டியுள்ளன. மிகத் துல்லியமான மருத்துவச் சேவைக்காக நவீன ரோபோட்டிக் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துவதில் இது ஒரு மாபெரும் முன்னேற்றமாகும். குடல் மற்றும் கல்லீரல், சிறுநீரகம், மகளிர் மருத்துவம், மார்பகம் மற்றும் தைராய்டு, குழந்தைகள் அறுவை சிகிச்சை, புற்றுநோய் அறுவைசிகிச்சை மற்றும் இதயவியல் என பல்வேறு மருத்துவப் பிரிவுகளில் இந்த ரோபோட்டிக் சிகிச்சைகள் உள்ளடக்கியுள்ளன.

கணையம், சிக்கலான பிரச்னைகளுக்கு ரோபோட்டிக் தொழில்நுட்பத்தை முதல்முறையாகப் பயன்படுத்திய பெருமை இம்மருத்துவமனையையே சாரும். கடந்த பத்து இப்பகுதியில் வருடங்களாக நவீன ரோபோட்டிக் தொழில்நுட்பங்களைத் தொடர்ந்து பயன்படுத்தி. தங்களின்




அறுவைசிகிச்சைத் திறனை மேம்படுத்தி வருகின்றனர். இது குறித்து நடைபெற்ற செய்தியாளர்கள் சந்திப்பில் பேசிய மருத்துவமனையின் மருத்துவ இயக்குநரும், குடல் மற்றும் இரைப்பை சிகிச்சை பிரிவின் முதுநிலை மருத்துவருமான ரமேஷ் அர்த்தநாரி 'ரோபோ உதவியுடன் செய்யப்படும் அறுவை சிகிச்சைகளில் 500 என்ற மைல்கல்லை எட்டியிருப்பது, மருத்துவ நிபுணத்துவம் தொழில்நுட்ப முன்னேற்றம் மற்றும் பல்வேறு துறைகளை உள்ளடக்கிய கூட்டு முயற்சி ஆகியவற்றில் எமது தொடர்ச்சியான அர்ப்பணிப்பைக் காட்டுகிறது. கடந்த 10 ஆண்டுகளில், இத்தொழில்நுட்பத்தின் மூலம் மிகவும் சிக்கலான அறுவைசிகிச்சைகளையும் எங்களால் மிகத்துல்லியமாகவும், பாதுகாப்பாகவும் செய்ய முடிகிறது என்றார் மேலும் குடல் மற்றும் இரையக குடலியல் அறுவைசிகிச்சை பிரிவின் தலைவரும் முதுநிலை நிபுணருமான மோகன் கூறுகையில்:'ரோபோட்டிக் அறுவைசிகிச்சையானது, அதிக துல்லியம், மேம்பட்ட கருவி கட்டுப்பாடு மற்றும் மேம்படுத்தப்பட்ட முப்பரிமாணக் காட்சிப்படுத்தல் ஆகியவற்றை வழங்கும் வகையில் பரிணாம வளர்ச்சி கண்டுள்ளது. சிக்கலான அறுவைசிகிச்சைகளைக் கூட மருத்துவர்களால் எளிதாகச் செய்ய முடிகிறது. இத்தொழில்நுட்ப வளர்ச்சியானது எதிர்காலத்தில் 'டெலி-சர்ஜரி' எனப்படும் தொலைதூர அறுவைசிகிச்சைகளுக்கும் வழிவகுக்கும். இதன்படி, மருத்துவர்கள் வேறு இடத்தில் இருந்தபடியே இணையத்தின் மூலம் நோயாளிகளுக்கு அறுவைசிகிச்சை செய்ய முடியும் என்றார் இது குறித்து நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில், ரோபோ உதவியுடன் மேற்கொள்ளப்படும் மருத்துவ நடைமுறைகள் குறித்து அனுபவங்களை முதுநிலை மருத்துவர்கள் பகிர்ந்துகொண்டனர். மருத்துவர்கள் ரமேஷ் அர்த்தநாரி மற்றும் மோகன் ஆகியோருடன், குடல் மற்றும் இரைப்பை சிகிச்சை பிரிவின் முதுநிலை மருத்துவர்கள், பிரதீப் மற்றும் ஜெகதீஷ் சந்திரபோஸ், சிறுநீரகவியல் துறையில் முதுநிலை நிபுணர் பால் வின்செண்ட், புற்றுநோய் அறுவைசிகிச்சை பிரிவின் தலைவர் விஜய பாஸ்கர், மகளிர் நோயியல் பிரிவின் தலைவர் பத்மா ஆகியோரும் கலந்துகொண்டு உரையாடினர்.

மேலும் மீனாட்சி சூப்பர் ஸ்பெஷாலிட்டி மருத்துவமனையின் இயக்குநர் திலீப் கலந்துகொண்டார்



■ "உங்களைத் தேடி உங்கள் ஊரில்" திட்டத்தின் கீழ், மதுரை மாவட்டம், மேலூர் ஊராட்சி ஒன்றியம், பதினெட்டாங்குடி கிராமத்தில் VB-G RAM G திட்டத்தின் கீழ் ரூபாய் 12.83 லட்சம் மற்றும் ரூபாய் 10.08 மதிப்பீட்டில் இரண்டு அரசு தரிசு நிலங்களில் புதிதாக கண்மாய் (நீர்நிலை) அமைக்கப்பட்டு வரும் பணிகளைமாவட்ட ஆட்சித்தலைவர் நிஷாந்த் கிருஷ்ணா ஆய்வு செய்தார். புதிதாக உருவாக்கப்படும் கண்மாய், ஒட்டுமொத்த கிராமத்தின் நிலத்தடி நீர்மட்டத்தை உயர்த்துவதற்கும், பொதுமக்களின் விவசாயம் மற்றும் கால்நடைகளின் நீர்த் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கும் மட்டுமே பயன்படுத்தப்படுவதை உறுதி செய்யுமாறு சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் அறிவுறுத்தினார்






■ "உங்களைத் தேடி உங்கள் ஊரில்" திட்டத்தின் கீழ் மதுரை மாவட்டம், மேலூர் வட்டம் மூவேந்தர் பண்பாட்டு கழக வளாகத்தில் மேலூர் வட்டத்தில் மேற்கொள்ளப்பட வேண்டிய குடிநீர், சுகாதாரம் மற்றும் சாலைப் பணிகள் உள்ளிட்ட அடிப்படை வசதிகள் குறித்தும், தமிழ்நாடு அரசின் சேவைகள் உரிய பயனாளிகளைச் சென்றடைவதை உறுதி செய்வது குறித்தும் மாவட்ட ஆட்சித்தலைவர் நிஷாந்த் கிருஷ்ணா, தலைமையில் அனைத்துத் துறை அரசு அலுவலர்களுடனான ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது.

## "நெல் கொள்முதலுக்கு லஞ்சம் பெறுவோர் மீது நடவடிக்கை"- அமைச்சர் வினோத்

திருச்சி, அக்.22-

"நெல் கொள்முதல் நிலையங்களில் நெல் கொள்முதலுக்கு லஞ்சம் பெறுவோர் மீது உடனடி நடவடிக்கை எடுக்க அறிவுறுத்தி உள்ளோம்" என தமிழ்நாடு வேளாண் மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் வினோத் தெரிவித்துள்ளார்.



திருச்சி விமான நிலையத்தில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், "பருவமழை தொடங்கியுள்ளதால் நெல் கொள்முதல் நிலையங்களில் எங்கு தேவைப்படுகிறதோ அங்கு புதிய கூரைகள் அமைக்க அறிவுறுத்தியுள்ளோம். தேவைப்படும் இடங்களில் புதிய கூரைகள் அமைக்கவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. மழை பாதிப்புகளை தடுக்க எந்தெந்த பகுதிகள் அபாயகரமாக உள்ளதோ அந்தப் பகுதிகளில் வாய்க்கால்கள் தூர்வார, பயிர்களைக் காப்பதற்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறோம்.

நெல் கொள்முதல் நிலையங்களில் நெல்லை கொள்முதல் செய்ய ஒரு சிலர் பணம் பெறத்தான் செய்கின்றனர். தவறு எங்கு நடைபெறுகிறதோ அங்கு உடனடியாக நடவடிக்கை எடுக்க நாங்கள் தயாராக உள்ளோம். இனிவரும் காலங்களில் இது போன்று நடக்காமல் இருக்க தேவையான நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ள உள்ளது.

தமிழ்நாட்டில் உரத் தட்டுப்பாடு என்பது கிடையாது. விவசாயிகள் தேவைக்கேற்ப விநியோகம் சரியாக உள்ளது. அவதூறு கருத்துக்கள் முதல்வர் பற்றி வைத்தால் மட்டும் அல்ல, யார் குறித்து அவதூறாகப் பேசினாலும், சம்பந்தப்பட்டவர்கள் மீது கண்டிப்பாக நடவடிக்கை எடுக்கப்படும். தவறு செய்தவர்கள் தண்டனையை ஏற்றுத்தான் ஆக வேண்டும்." என்று அமைச்சர்கள் வினோத் தெரிவித்தார்.

## "எடப்பாடி பழனிசாமியும், திமுகவும் ஒன்றுதான்" - அமைச்சர் செங்கோட்டையன்

சென்னை, அக்.22-

"தமிழ்நாடு அரசியலில் முன்னாள் முதல்வர் எடப்பாடி பழனிசாமியும், திமுகவும் ஒன்றுதான்" என்று வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறை அமைச்சர் செங்கோட்டையன் தெரிவித்துள்ளார்.



திருச்சி விமான நிலையத்தில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், "தமிழ்நாட்டுக்கு வருவாய் அதிகரிக்க தேவையான துறை சார்ந்து மேற்கொள்ளப்பட்டு வரும் நடவடிக்கைகள் குறித்து நிதித்துறை அமைச்சர் மரிய வில்சன் தெளிவாக தெரிவித்துள்ளார். அதற்கேற்றார் போல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது." என்றார்.

திமுக ஆட்சிக் காலத்தில் வெள்ள நீரை வெளியேற்ற மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளை தற்போது தமிழக வெற்றிக் கழகம் செய்தது போல் பெயர் வாங்கிக் கொள்வதாக முன்னாள் அமைச்சர் கே.என்.நேரு விமர்சித்தது குறித்து கேட்டபோது, "ஆட்சிக் காலத்தில் இது அனைத்தும் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள். மேலும் கடந்த ஆட்சியில் வெள்ள நீர் வெளியேற்று நடவடிக்கைகள் முழுதாக மேற்கொள்ளப்படவில்லை. தமிழக வெற்றிக் கழகம் ஆட்சிப் பொறுப்பு ஏற்ற நான்கு மாதங்களில் கடந்த ஆட்சியாளர்கள் செய்யத் தவறியவற்றை விரைவாக செய்து வருகிறோம்" என்றார்.

தொடர்ந்து பேசிய அவர், "திமுகவினர் அரசியல் நாகரீகத்தை கடைப்பிடிக்க தவறி உள்ளனர். முதல்வர் குறித்து தேவையற்ற அவதூறு பேச்சுக்களை பேசுவதை அவர்கள் முன்னெடுத்துள்ளனர். அரசியலில் நாகரீகம் கடைப்பிடிப்பது முக்கியமான ஒன்று" என்று கூறினார்.

முன்னாள் முதல்வர் எடப்பாடி பழனிசாமி திமுகவினர் அவதூறாகப் பேசுவதை ஊக்குவிக்கும் விதமாக கருத்து தெரிவித்து வருவது குறித்து கேள்வி எழுப்பியபோது, "எடப்பாடி பழனிசாமியும், திமுகவும் வேறு அல்ல. இருவருமே அரசியலைப் பொறுத்தவரை ஒன்றுதான்." என்று அமைச்சர் செங்கோட்டையன் தெரிவித்தார்.

present sale for
all over Tamil Nadu

தற்பொழுது தமிழகமெங்கும் விற்பனையாகி வருகிறது



## வடகரை ஸ்ரீ பாமாருக்மணி சமேத வேணுகோபால் சுவாமி சன்னதியில் புரட்டாசி மாத திருவிழா

மாதவரம், அக்.22-

மாதவரம் தொகுதி புழல் ஒன்றியம் வடகரை ஊராட்சி பாடசாலை தெருவில் உள்ள அருள்மிகு ஸ்ரீ பாமாருக்மணி சமேத வேணுகோபால் சுவாமி சன்னதியில் 89-ம் ஆண்டு புரட்டாசி மாத திருவிழா ஆலய நிர்வாகிகள் பக்கிரி-லதா தலைமையில் நடைபெற்றது. நிகழ்ச்சியில் ஆன்மீக சிந்தனையாளர் வெங்கடேசன் - ரூபணி குடும்பத்தினர்கள் உபயமாக சுப்பிரபாரதத்துடன் பொது தனியன், திருபல்லாண்டு சேவை, திருப்பள்ளிஎழுச்சி, திருப்பாவை உள்ளிட்ட பல்வேறு சிறப்பு பூஜைகள் நடைபெற்றது. பின்னர் மூலவர் சுவாமிக்கு வண்ண மலர்களால் சிறப்பு அலங்காரம் செய்யப்பட்டு மஹா தீபா ராதனை காண்பி க்கப்பட்டது. இத்திருவி ழாவிற்கு சுற்றுவட்டார பக்தர்கள், கிராமபொதுமக்கள் திரளாக கலந்துகொண்டு அர்ச்சனைகள் செய்து சுவாமி தரிசனம் செய்தனர். முடிவில் கிராண்ட்லையன் ஊராட்சியில் உள்ள சமூக சேவகர் குணசேகரன் - பிரியா குடும்பத்தினர்கள் சார்பில் பக்தர்களுக்கு அன்னதானம் மற்றும் பிரசாதம் வழங்கினர்.



## சில்ரன்ஸ் பேரடைஸ் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளியில் புதிய மழலையர்கள் சேர்க்கை

மாதவரம், அக்.22-

மாதவரம் தொகுதி சோழவரம் ஒன்றியம் பாடியநல்லூர் ஊராட்சி எம்.ஏ. நகரில் இயங்கிவரும் சில்ரன்ஸ் பேரடைஸ் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளியில் விஜயதசமி தினத்தை முன்னிட்டு வித்யாரம்பம் நிகழ்ச்சி மற்றும் புதிய மழலையர்களுக்கு கல்வி உபகரணங்கள் வழங்கும் நிகழ்ச்சி பள்ளி தாளாளர் என்.ராஜன் தலைமையில் நடைபெற்றது. பள்ளியின் முதல்வர் விஜயா முன்னிலை வகித்தார். நிகழ்ச்சியில் புதிதாய் சேர்ந்த மழலை யர்கள் நெல்மணிகளில் "அ"கரம் எழுத வைத்து அ முதல் ஃ வரை சொல்ல வைத்தனர். புதிதாய் பள்ளியில் சேர்ந்த மழலையர்களுக்கு கல்வி உபகரணங்கள் வழங்கப்பட்டது. மேலும் நவராத்திரி திருவிழாவை முன்னிட்டு தொடர்ந்து 9 நாள்களும் பள்ளி வளாகத்தில் கொலு வைத்து வழிபட்டனர். இதில் மழலையர்கள், பெற்றோர்கள், ஆசிரியர்கள் கலந்துகொண்டனர்.



## நவராத்திரி விழாவை முன்னிட்டு ஒன்பது நவ மாதாக்கள் போன்று அம்மன் வேடமிட்ட குழந்தைகளிடம் ஆசிர்வாதம்

சென்னை, அக்.22-

சென்னை, ரெட்ஹில்ஸ், பாடியநல்லூர், மொண்டியம்மன் நகர், மேட்டுப்பகுதியில் அமைந்துள்ள அருள்மிகு ஸ்ரீ கங்கை கண்ட செல்வ விநாயகர் சாமுண்டீஸ்வரி அம்மன் சிவகாமி சமேத சிதம்பரேஸ்வரர் கால பைரவர் அனுமான் ஐயப்பன் திருக்கோயிலில் நவராத்திரி பூஜை உற்சவ விழா வெகு விமர்சையாக நடைபெற்றது.



சரஸ்வதி பூஜையை முன்னிட்டு கோவிலில் யஸஹ ஸ்ரீ சக்கர மஹா எந்திர யாக பூஜை மற்றும் நவ மாதாக்கள் போன்று ஒன்பது பெண் குழந்தைகள் அம்மன் வேடம் இட்டு அவர்களுக்கு பாத பூஜைகள் நடத்தப்பட்டது, அதனைத் தொடர்ந்து அம்மனுக்கு அலங்காரம் தீபாராதனை நடைபெற்றது, திருக்கோயில் நிர்வாகிகள் தலைவர் மோகன்ராஜ், செயலாளர் காந்திராஜ், பொருளாளர் சீனிவாசன், துணைத் தலைவர் ஞானமணி, மகேந்திரன், சீனிவாசன், நாகராஜ், சுரேஷ்குமார், துணைச் செயலாளர்கள் நாகலிங்கம் பழனி முருகேசன், இந்திரகுமார் விமல்ராஜ், திருக்கோயில் அறங்காவலர்கள் சேகர், ஆறுமுக பாண்டி, கோபால், ராஜா, துளசி ராஜேந்திரன், வைரமுத்து, ராஜேந்திரன், மதியழகன், மேலும் கௌரவ ஆலோசகர்கள், செயற்குழு உறுப்பினர் சரவணன் ஆகியோர் விழாவை சிறப்பாக செய்து இருந்தனர், வருகை தந்த பக்தர்கள் பொதுமக்கள் அனைவருக்கும் பிரசாதம் வழங்கப்பட்டது.

## திருப்பத்தூரில் தொடரும் 'வசூல் வேட்டை'?! - பி.ஆர்.ஓ ராஜபிரகாஷ் மீது பாயும் அடுக்கடுக்கான புகார்கள்!

திருப்பத்தூர், அக்.22-

திருப்பத்தூர் மாவட்டத்திலிருந்து அதிர்ச்சியூட்டும் சில தகவல்கள் வெளியாகியுள்ளன. அரசுத் துறைகள் மக்களின் நலனுக்காகச் செயல்பட வேண்டும் என்ற அரசாங்கத்தின் உத்தரவை காற்றில் பறக்கவிட்டுவிட்டு, திருப்பத்தூர் மாவட்ட செய்தி மக்கள் தொடர்புத் துறை அலுவலகத்தில் அரங்கேறிவரும் முறைகேடுகள் தற்போது பெரும் சர்ச்சையைக் கிளப்பியுள்ளவை."

மாவட்ட ஆட்சியர் கலந்துகொள்ளும் அரசு நிகழ்ச்சிகள் முடிந்த பிறகும், நிகழ்ச்சி ஏற்பாட்டாளர்களிடம் இருந்து பணம் கைமாறும் வரை தனது அதிகாரப்பூர்வ வாகனத்தை நகர்த்த மாட்டாராம் திருப்பத்தூர் மாவட்ட PRO ராஜபிரகாஷ். பணத்துக்காகத் தொடர் தொல்லை.



பணக் கொடுக்கல் வாங்கலில் தாமதம் ஏற்பட்டால், சம்பந்தப்பட்டவர்களின் எண்களுக்குத் தொடர்ச்சியாக அழைத்து மிரட்டல் விடுப்பதாகவும் புகார்கள் எழுந்துள்ளன.

நான் 20 கோடி ரூபாய்க்குச் சொத்து சேர்த்தவன்; எனக்கு இந்த வேலை அவசியமில்லை; நான் அரசியல் குடும்பத்தைச் சேர்ந்தவன், உங்களால் முடிந்ததைப் பார்த்துக் கொள்ளுங்கள்" என்று சக ஊழியர்களிடமும் பத்திரிகையாளர்களிடமும் அவர் திமிராகப் பேசுவதாகக் குற்றச்சாட்டுகள் பதிவாகியுள்ளன.

உண்மையாகக் களத்தில் உழைக்கும் செய்தியாளர்களைப் புறக்கணிப்பதோடு, அவர்களின் வருகைப் பதிவேட்டில் தன்னிச்சையாக 'ஆப்சன்' போடுவது, பேருந்து பயண அட்டை (Bus Pass) வழங்க பணம் கேட்பது போன்ற செயல்களில் அவர் ஈடுபடுவதாகப் பத்திரிகையாளர்கள் வேதனை தெரிவிக்கின்றனர்.

மேலும், அலுவலகத்திற்கு வரும்போது தனது தனிப்பட்ட பைகள், செல்போன் மற்றும் தண்ணீர் பாட்டில் போன்றவற்றைத் தூக்கச் சொல்லி சக ஊழியர்களை அடிமைகள் போல நடத்துவதாகவும் கடுமையான புகார்கள் வந்துள்ளன.

அரசுக்கும் துறைக்கும் அவப்பெயர் ஏற்படுத்தும் இது போன்ற அதிகாரிகள் மீது, மாவட்ட நிர்வாகமும் துறை சார்ந்த உயர் அதிகாரிகளும் உடனடியாகத் தகுந்த விசாரணை நடத்தி உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதே சமூக ஆர்வலர்களின் ஒட்டுமொத்த எதிர்பார்ப்பாக உள்ளது.




## ஆயுத பூஜை தினத்தன்று இரண்டு பயனாளிகளுக்கு இலவசமாக புதிய ஆட்டோக்கல் வழங்கல்

மாதவரம், அக்.22-

மாதவரம் சட்டமன்ற உறுப்பினரும் தவெக திருவள்ளூர் தென்மேற்கு மாவட்டச் செயலாளருமான எம்.எல். விஜய்பிரபு அலுவலகத்தில் ஆயுத பூஜை விழா சிறப்பாக கொண்டாடப்பட்டது. நிகழ்ச்சியில், சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட ஒரு பெண்மற்றும் ஒரு ஆண் ஆகிய இருவருக்கு வாழ்வதற்காக இரண்டு புதிய ஆட்டோக்களை மாதவரம் சட்டமன்ற உறுப்பினர் எம்.எல். விஜய்பிரபு இலவசமாக வழங்கினார். பின்னர்

ஆட்டோவைப் பெற்றுக் கொண்ட இருவரும், சொந்தமாக ஆட்டோ வாங்க முடியாமல் வாடகை ஆட்டோ ஓட்டி, பொருளாதார சிரமங்களை அனுபவித்து வந்த நாங்கள் இந்த ஆட்டோக்களின் மூலம் சுயமாக சம்பாதிக்கவும், வருமானம் ஈட்டிக் கொள்ளவோம் எங்களால் முடியும் என்று தன்னம்பிக்கையுடன் கூறினர். ஆட்டோவைப் பெற்றுக் கொண்ட பெண் பயனாளி, தனது கணவர் உடல் நிலை குன்றிய நிலையில் தங்கள் குடும்பத்தின் வாழ்வாதாரத்திற்காக ஆட்டோ வழங்கிய தமிழக முதல்வருக்கும் மாதவரம் சட்டமன்ற உறுப்பினருக்கும் நல்லுள்ளங்களுக்கும் நன்றி தெரிவிப்பதோடு அவர்களுக்காக மனமுருகி இறைவனிடம் பிரார்த்திக்கின்றோம் என்றனர்.





## நீலகிரி மாவட்ட கராத்தே டூ சங்கத்தின் 30வது ஆண்டு விழா

நீலகிரி, அக்.22-

நீலகிரி மாவட்ட கராத்தே டு சங்கத்தின் 30வது ஆண்டு விழாவை குன்னூரில் கேக் வெட்டி கொண்டாடினர். சிறப்பு அழைப்பளர்களாக முன்னாள் தேசிய கராத்தே சங்கத்தின் துனை செயலாளர்கள் பால்விக்ரமன், தேவராஜ் மற்றும் கோவை கராத்தே சங்கத்தின் நிர்வாகிகள். வீரமணி, பாலசுப்பிரமணி, சினோத், பாலு, ராஜ்குமார், மகேஷ்வரன். ஆகியோர் கலந்து கொண்டனர். விழாவிற்கான ஏற்பாடுகளை நீலகிரி மாவட்ட கராத்தே டு சங்கத்தின் செயலாளர் ஜோசப் பாக்கிய செல்வம், பொருளாளர் ராமகிருஷ்ணன், துனை தலைவர். ஜான் மற்றும், நித்தியா, உதயகுமார், ரீனா, நவீன் ஆகியோர் சிறப்பாக செய்திருந்தனர். பின்னர் ஆலன் திலக் கராத்தே பள்ளியில் பிளாக் பெல்ட் பெற்ற அனைவருக்கும் நினைவு பரிசு வழங்கப்பட்டது. அதன் பின் புத்துணர்வு நிகழ்ச்சி உட்பட கராத்தே முகாம் மற்றும் கலர் பெல்ட் டெஸ்ட் நடைபெற்றது. கலந்து கொண்ட அனைவருக்கும். பெல்ட் மற்றும் சான்றிதழ்கள், வழங்கப்பட்டது.



## புழல் ஒன்றியம் தண்டல்கழனி பகுதியில் நடைபெற்ற காய்ச்சல் முகாமை கூடுதல் இயக்குநர் ஆய்வு செய்தார்

மாதவரம், அக்.22-

திருவள்ளூர் மாவட்டம், புழல் ஒன்றியத்திற்கு உட்பட்ட தண்டல்கழனி பகுதியில் பொதுமக்களுக்கு காய்ச்சல் தடுப்பு சிறப்பு முகாம் நடைபெற்றது. பொது சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு மருந்துத் துறையின் கூடுதல் இயக்குநர் டாக்டர் சம்பத் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

இந்த ஆய்வின்போது மாவட்ட சுகாதார அலுவலர் டாக்டர் பிரியாராஜ், வட்டார மருத்துவ அலுவலர் டாக்டர் மதுமதி ஆகியோர் உடனிருந்தனர். மேலும், வட்டார சுகாதார மேற்பார்வையாளர் லக்ஷ்மன்சிங் மற்றும் சுகாதார ஆய்வாளர் சுகுமார் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

முகாமில் காய்ச்சல் பாதிப்புடன் வந்த பொதுமக்களின் பரிசோதனை, சிகிச்சை மற்றும் பதிவேடுகள் பராமரிப்பு குறித்து கூடுதல் இயக்குநர் கேட்டறிந்தார். பின்னர் அலுவலர்களுக்குப் பின்வரும் அறிவுறுத்தல்களை வழங்கினார்: மேலும் நீர்நிலைகள் மற்றும் குடிநீர் ஆதாரங்களில் முறையாகக் குளோரினேற்றம் செய்து, குடிநீர் பாதுகாப்பை உறுதிசெய்ய வேண்டும்., காய்ச்சலால் பாதிக்கப்பட்டவர்களுக்குத் தாமதமின்றி உடனடியாகச் சிகிச்சை அளிக்க வேண்டும். உள்ளிட்ட அனைத்து அத்தியாவசிய மருந்துகளும் போதிய அளவில் இருப்பு உள்ளதை உறுதிசெய்ய வேண்டும்.

பொதுமக்கள் காய்ச்சல் அறிகுறிகள் தென்பட்டால் தாமதிக்காமல் அருகிலுள்ள சுகாதார நிலையத்தை அணுகு மாறும், காய்ச்சிய குடிநீரைப் பருகுமாறும், வீடுகளைச் சுற்றி நீர் தேங்காமல் பார்த்துக்கொள்ளுமாறும் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.





■ கிருஷ்ணகிரி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவலக வளாகத்தில், அக்டோபர் 21 -ஆம் நாள் காவலர் வீர வணக்க நாளை முன்னிட்டு, மாவட்ட ஆட்சித்தலைவர் தினேஷ் குமார் மற்றும் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அனிதா ஆகியோர் தலைமையில் காவல் துறை அலுவலர்கள் மற்றும் காவலர்கள் 2 நிமிடம் மவுன அஞ்சலி செலுத்தினார்கள்.

## கிருஷ்ணகிரியில் மழைநீர் தேங்கும் பகுதிகளில் மாவட்ட ஆட்சித் தலைவர் நேரில் ஆய்வு! வடிகால்களில் உள்ள அடைப்புகளை அகற்றவும், ஆக்கிரமிப்புகளை அகற்றி நீர்வழிப் பாதைகளைச் சீரமைக்கவும் அதிகாரிகளுக்கு உத்தரவு!

கிருஷ்ணகிரி, அக்.22-

தமிழக அரசின் "உங்களைத் தேடி உங்கள் ஊரில்" திட்டத்தின் கீழ், கிருஷ்ணகிரி மாவட்டத்தில் மழைக்காலங்களில் தண்ணீர் தேங்கி பொதுமக்களுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் பகுதிகளில் மாவட்ட ஆட்சித் தலைவர் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.



கிருஷ்ணகிரி மாவட்ட நூலகம், புதிய பேருந்து நிலையம், சின்ன ஏரியின் நீர்வரத்துக் கால்வாய் மற்றும் நீர் வெளியேற்றுக் கால்வாய் உள்ளிட்ட பகுதிகளை மாவட்ட ஆட்சித் தலைவர் தினேஷ்குமார் ஆய்வு செய்தார். மேலும், கிருஷ்ணகிரி பழைய பேருந்து நிலையத்தில் மழைக்காலங்களில் தண்ணீர் தேங்கி நிற்கும் பகுதிகளையும் பார்வையிட்டு, மழைநீரை விரைவாக வெளியேற்றுவதற்கான நடவடிக்கைகள் குறித்து சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களுடன் ஆலோசனை நடத்தினார்.

இந்த ஆய்வின்போது, மழைநீர் வடிகால்களில் உள்ள அடைப்புகளை உடனடியாக அகற்றவும், நீர்வரத்துக் கால்வாய்கள் மற்றும் வெள்ளநீர் வெளியேறும் கால்வாய்களில் உள்ள ஆக்கிரமிப்புகளைக் கண்டறிந்து அகற்றவும் மாவட்ட ஆட்சித் தலைவர் அறிவுறுத்தினார்.

மேலும், மழைக்காலங்களில் சாலைகள், பேருந்து நிலையங்கள் மற்றும் பொதுமக்கள் அதிகம் பயன்படுத்தும் இடங்களில் மழைநீர் தேங்காமல் இருப்பதை உறுதி செய்ய வேண்டும் என்றும், வடிகால்களை முறையாகப் பராமரித்து நீர்வழிப் பாதைகளில் தடையின்றி தண்ணீர் செல்ல உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்றும் துறை சார்ந்த அலுவலர்களுக்கு உத்தரவிட்டார்.

நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சித் துறை மற்றும் வருவாய்த் துறை அலுவலர்கள் ஒருங்கிணைந்து செயல்பட்டு, மழைநீர் தேங்கும் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண வேண்டும் என்றும், பொதுமக்களின் போக்குவரத்துக்கும் அன்றாட வாழ்வுக்கும் இடையூறு ஏற்படாத வகையில் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் வலியுறுத்தினார்.

மாவட்ட வருவாய் அலுவலர் மஞ்சுளா, கிருஷ்ணகிரி வட்டாட்சியர் ராஜலட்சுமி,கிருஷ்ணகிரி நகராட்சி ஆணையாளர் சேகர், வட்டார வளர்ச்சி அலுவலர்கள் உமாசங்கர், செல்ல கண்ணாள் உள்ளிட்ட அரசு அலுவலர்கள் நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்

மழைக்காலங்களில் ஏற்படும் வெள்ளப் பாதிப்புகளைத் தவிர்க்கவும், மழைநீர் தேங்குவதால் பொதுமக்கள் எதிர்கொள்ளும் சிரமங்களைக் குறைக்கவும் மாவட்ட நிர்வாகம் சார்பில் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் குறித்து இந்த ஆய்வின்போது அறிவுறுத்தப்பட்டது.




## வடமதுரை பேட்டைமேடு சேர்ந்த தவெக நிர்வாகிகள் வினோத் கிருஷ்ணமூர்த்தி 20 லட்சம் மதிப்புள்ள அப்போலோ டயர்களை திருடிய வழக்கில் தலைமறைவு

திருவள்ளூர், அக்.22-

திருவள்ளூர் மாவட்டம் 82. பனப்பாக்கத்தில் அமைந்துள்ள அப்போலோ டயர் கம்பெனியில் பணி புரியும் அமுல்ராஜ் த/ பெ.தேவதாஸ் என்பவர் அங்குள்ள சுமார் 28 டயர்களை கம்பெனிக்கு தெரியாமல் திருடி அதனை பேட்டைமேடு வடமதுரையை சேர்ந்த வினோத் மற்றும் கிருஷ்ணமூர்த்தி என்பவரும் விற்பனை செய்துள்ளார் மேற்கண்ட வினோத்தும் கிருஷ்ணமூர்த்தியும் அதனை வேறொரு நபர்களுக்கு விற்பனை செய்துள்ளனர் இதில் அமுல்ராஜ் என்பவர் விசாரணை செய்து கைது செய்யப்பட்டு சிறையில் உள்ளார் மேற்கண்ட வினோத்தும் கிருஷ்ணமூர்த்தி என்பவரும் வழக்குக்கு பயந்து தலைமறைவாகி விட்டனர் அவர்களை போலீசார் வலை வீசி தேடி வருகின்றனர்



## குன்னூர் அறிஞர் அண்ணா மேல்நிலை பள்ளி மைதானத்தில் மாவட்ட அளவிலான ஹாக்கி போட்டி

நீலகிரி, குன்னூர் அக், 22-

நீலகிரி மாவட்ட அளவிலான ஹாக்கி போட்டி. குன்னூர் அறிஞர் அண்ணா மேல்நிலை பள்ளி மைதானத்தில் கடந்த இரு வாரங்களாக நடைபெற்ற ஹாக்கி போட்டி இதில் ஏ டிவிசன் பிரிவில் யுனைடெட் ஸ்போர்ட்ஸ் கிளப் அணி முதல் பரிசையும் குன்னூர் ஸ்டிக்கிங் லென்ஸ் அணி இரண்டாம் இடத்தையும் பிடித்தனர். பி இன் டிவிஷன் போட்டியில் ராபிடஸ் அணி முதலிடத்தையும் ஜகதலா அணி இரண்டாம் இடத்தையும் பிடித்தனர். சி டிவி சன் போட்டியில் தயான் சந்த் அணி முதலிடத்தையும் குன்னூர் உதகை கிரசன்பள்ளி இரண்டாம் இடத்தையும் பிடித்தனர். ஹாக்கி யூனிட் ஆஃப் நீல்கிரிஸ் கே எம் கே ஸ்போர்ட்ஸ் கிளப் இணைந்து நடத்திய இரண்டாம் ஆண்டு கார்த்தி நினைவு கோப்பை ஹாக்கி போட்டி நிறைவு. முன்னதாக நடைபெற்ற பரிசளிப்பு விழாவில் ஹாக்கி யூனிட் ஆப் நீல்கிரிஸ் அமைப்பின் தலைவர் சி அசோக் குமார். துணைத் தலைவர் கோபிநாத் செயலாளர் ராஜா இணைச் செயலர்கள் ஆர் சுரேஷ் குமார் கணேஷ் பொருளாளர் சுமித் ராமன் மற்றும் கார்த்திக்கின் துணைவியார் ஐஸ்வர்யா கோப்பைகளை வழங்கி சிறப்பித்தனர். கே எம் கே ஸ்போர்ட்ஸ் கிளப் செயலாளர் சண்முகசுந்தரம் மற்றும் ஊர் பொதுமக்கள் தனிநபர் பரிசுகளை வழங்கி சிறப்பித்தனர்உ றுப்பினர்கள் ஜமேஷ் சந்தோஷ் சுரேஷ் சரவணன் ஆகியோர் கலந்து கொண்டனர். நடுவர்களாக குட்டி ரவி கிரி அருண் சிஜிமோன் தமிழரசன் தினேஷ் பிரவீன் ஆகியோர் செயல்பட்டனர் வெற்றி பெற்ற அணிகளுக்கு ஹாக்கி யூனிட் ஆப் நீல்கிரீஸ் அமைப்பின் மூத்த துணைத்தலைவர் ஆனந்த கிருஷ்ணன் வாழ்த்துக்களை தெரிவித்தார் இந்நிகழ்ச்சியை செயலாளர் ராஜா தொகுத்து வழங்கினார் பின்னர் தேசிய கீதத்துடன் விழா இனிதே நிறைவு பெற்றது.

## ஊரப்பாக்கம் ஊராட்சியில் ரூ.39 லட்சம் மதிப்பீட்டில் வாட்டர் டேங்க், நூலகம் திமுக ஊராட்சி மன்ற தலைவர் திறந்து வைத்தார்

கூடுவாஞ்சேரி, அக்.22-

செங்கல்பட்டு மாவட்டம், காட்டாங்கொளத்தூர் ஒன்றியத்திற்குட்பட்ட ஊரப்பாக்கம் ஊரா ட்சியில், ஊரப்பா க்கம், கிளாம்பா க்கம், ஐயஞ்சேரி உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் 50 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள் வசித்து வருகின்றனர்.





இதில், ஊராட்சிக்குட்பட்ட 4வது வார்டு முத்துவேல் நகரில் 15வது நிதி குழுமம் மானியத்தில் ரூ.17 லட்சம் மதிப்பீட்டில் 60ஆயிரம் கொள்ளளவு கொண்ட குடிநீர் மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி அமைக்கப்பட்டது. இதேபோல் ஊராட்சிக்கு உட்பட்ட 13வது வார்டு, கங்கை நகரில் ரூ.22 லட்சம் மதிப்பீட்டில் நூலகம் அமைக்கப்பட்டன.

இந்நிலையில், உள்ளாட்சி பிரதிநிதிக ளின் பதவி காலம் முடிவடைந்ததையொட்டி குடிநீர் மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி மற்றும் நூலகம் திறப்பு விழா நேற்று மாலை நடைபெற்றது. இதில் ஊராட்சி செயலர் ராம பக்தன் தலைமை தாங்கினார். வார்டு உறுப்பினர்கள் முன்னிலை வகித்தனர். சிறப்பு அழைப்பாளர்களாக திமுக ஊராட்சி மன்ற தலைவர் பவானிகார்த்தி, துணை தலைவர் ரேகாகார்த்திக் ஆகியோர் கலந்துகொண்டு ரூ.39 லட்சம் மதிப்பீட்டில் அமைக்கப்பட்ட குடிநீர் மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி மற்றும் நூலகம் ஆகியவற்றை ரிப்பன் வெட்டி திறந்து வைத்து பொதுமக்களுக்கு இனிப்புகளை வழங்கினர்.

முன்னதாக ஊராட்சி மன்ற அலுவலக வளாகத்தில் ஆயுத பூஜை கொண்டாடப்பட்டது. இதில் தூய்மை பணியாளர்கள், குடிநீர் பராமரிப்பாளர்கள், தெருவிளக்கு பராமரிப்பாளர்கள் அலுவலக பணியாளர்கள் உட்பட 200க்கும் மேற்பட்டோருக்கு பொறி, கடலை, பழங்கள், இனிப்பு மற்றும் 8 அடுக்கு கொண்ட கிச்சன் பாத்தி ரங்களை திமுக ஊராட்சி மன்ற தலைவர் பவானிகார்த்தி தனது சொந்த செலவில் வழங்கினார்.

## மேடவாக்கத்தில் காயிதே மில்லத் ஆண்கள் கல்லூரில் 43-வது பட்டமளிப்பு விழா அறிக்கை

மேடவாக்கம், அக்.22-

சென்னை, மேடவாக்கத்தில் அமைந்துள்ள காயிதே மில்லத் ஆண்கள் கல்லூரியின் 43-வது பட்டமளிப்பு விழா, 18.10.2026 அன்று பிற்பகல் 3.30 மணியளவில் கல்லூரி வளாகத்தில் நடைபெற்றது. கல்லூரி முதல்வர் முனைவர் மு. அம்துல் தவாப் அவர்கள் வரவேற்புரை வழங்கினார்.

கல்லூரியின் செயலரும் தாளாளருமான அல்ஹாஜ் எம்.ஜி. தாவூத் மியாகான் அவர்கள் தலைமையுரையாற்றினார். அப்போது, பெருந்தலைவர் காயிதே மில்லத் அல்ஹாஜ் முகமது இஸ்மாயில் சாகிப் அவர்கள் போற்றிப் பாதுகாத்த உயரிய மதிப்புகள், இலட்சியங்கள் மற்றும் கொள்கைகளை எடுத்துரைத்தார். ஒழுக்கம், நேர்மை, விதிமுறைகளுக்கு மதிப்பளித்தல், கொள்கைப்பற்று மற்றும் வாழ்வின் அனைத்துத் துறைகளிலும் பொறுப்புடன் நடந்துகொள்ளுதல் ஆகியவற்றின் முக்கியத்துவத்தை வலியுறுத்தினார். கல்வி என்பது வெறும் கல்வித் தகுதிகளால் மட்டும் அளவிடப்படக் கூடாது என்றும், ஒருவரின் நற்பண்புகள், விழுமியங்கள் மற்றும் சமூகத்திற்கான பங்களிப்பே கல்வியின் உண்மையான அடையாளங்கள் என்றும் குறிப்பிட்டார். காயிதே மில்லத் இஸ்மாயில் சாகிப் அவர்களின் உயரிய இலட்சியங்களைப் பின்பற்றி, தங்களது செயல்கள் மற்றும் சாதனைகள் மூலம் அவரது மரபைப் போற்றிப் பாதுகாக்குமாறு பட்டதாரிகளைக் கேட்டுக்கொண்டார். மேலும், பட்டதாரிகள் கல்லூரியின் உண்மையான தூதுவர்களாகத் திகழ்ந்து, ஒழுக்கம், நெறிமுறையான நடத்தை, அர்ப்பணிப்பு மற்றும் சமூக சேவை ஆகியவற்றின் மூலம் தங்களது கல்வி நிறுவனத்திற்குப் பெருமை சேர்க்க வேண்டும் என்றும் வலியுறுத்தினார்.

தமிழ்நாடு சட்டமன்றத் தலைவரும் சட்டமன்ற உறுப்பினருமான திரு. ஜே.சி.டி. பிரபாகர் அவர்கள் பட்டமளிப்பு உரையாற்றி, பட்டங்களை வழங்கினார். பட்டங்கள் பெறுவது கற்றலின் முடிவாக அல்லாமல், செயல்பாட்டிற்கான அடித்தளமாகக் கருதப்பட வேண்டும் என்று அவர் வலியுறுத்தினார். சான்றிதழ்களைவிட நேர்மை, கடின உழைப்பு மற்றும் விடாமுயற்சியே வாழ்க்கையில் முக்கியமானவை என்று குறிப்பிட்டார். தகவல்




தொடர்புத் திறன், கணினித் திறன் மற்றும் சிக்கல்களுக்குத் தீர்வு காணும் திறன் ஆகியவற்றை வளர்த்துக்கொள்ளுமாறு பட்டதாரிகளுக்கு அறிவுறுத்தினார். மேலும், தொழில்முனைவில் ஈடுபடுவதன் அவசியத்தை எடுத்துரைத்ததுடன், “ஒரு நல்ல யோசனையே முதல் முதலீடாக அமையலாம்” என்றும் குறிப்பிட்டார். சுயநிதி அடிப்படையில் கல்லூரியைச் சிறப்பாக நிர்வகித்து வருவதையும், அதிக அளவில் பெண் ஆசிரியர்களைப் பணியமர்த்தியிருப்பதையும் பாராட்டினார். கல்வி, ஆராய்ச்சி மற்றும் சமூகப் பொறுப்புணர்வு ஆகிய துறைகளில் கல்லூரி ஆற்றிவரும் சிறப்பான பங்களிப்பையும் வெகுவாகப் பாராட்டினார். மேலும், இக்கல்லூரி பெயர்தாங்கியிருக்கும் கண்ணியமிகு காயிதே மில்லத் முகமது இஸ்மாயில் சாகிப் அவர்களுக்கும் புகழஞ்சலி செலுத்தினார்.

சென்னை குருநானக் கல்லூரியின் செயலரும் தாளாளருமான திரு. மஞ்சித் சிங் நய்யார் அவர்கள் பட்டதாரிகளை வாழ்த்திப் பேசினார். திரு. மஞ்சித் சிங் நய்யார் அவர்கள் பட்டதாரிகள் சமூகத்திற்கு அர்த்தமுள்ள பங்களிப்புகளை வழங்க வேண்டும் என்றும், தாங்கள் பயின்ற கல்வி நிறுவனத்துடனான தொடர்பைத் தொடர்ந்து பேணிப் பாதுகாக்க வேண்டும் என்றும், பொறுப்புள்ள குடிமக்களாக உருவெடுக்க வேண்டும் என்றும் அறிவுறுத்தினார். போதைப்பொருள் இல்லாத தமிழகத்தை உருவாக்குவதன் அவசியத்தை வலியுறுத்திய அவர், பெற்றோரை மதித்து, அவர்களின் முதுமைக் காலத்தில் அவர்களுக்குத் துணையாக இருக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார். மேலும், பொதுச் சேவையில் ஈடுபட்டு, சமூக நலனுக்காகப் பாடுபட வேண்டும் என்றும் பட்டதாரிகளை வலியுறுத்தினார்.

இவ்விழாவில் மூன்று மாணவர்கள் பல்கலைக்கழகத் தரவரிசைப் பட்டியலில் இடம்பிடித்துச் சாதனை படைத்தனர். மொத்தம் 867 பட்டதாரிகள் பட்டங்களைப் பெற்றனர். இவர்களில் 39 பேர் முதுநிலைப் பட்டதாரிகள் ஆவர்.



## உதகை அரசுமேல்நிலைப்பள்ளி அருகே நடைபாதையில் உள்ள முட்புதர் செடிகளை அகற்ற நடவடிக்கை கோரிக்கை

நீலகிரி, அக்.22-

உதகை அரசு மேல்நிலைப் பள்ளி நடைபாதை அருகே இருபுற ஓரங்களிலும் முட்புதர் செடிகள் வளர்ந்துள்ள நிலையில் இந்த நடைபா தையில் நடந்து செல்லும்

பள்ளி மாணவ மாணவி யர்கள் பொது மக்கள் என அனைத்து தரப்பினரும் பாதிக்கப்படும் நிலையில் உதகை நகராட்சி இந்த முட்புதர் செடிகளை அகற்றி பள்ளி மாணவ மாணவியர் பொதுமக்கள் சிரமமின்றி நடந்து செல்ல நடவடிக்கை மேற்கொள்ள பொது மக்கள் சமூக ஆர்வலர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்




## விவேகானந்தா மெட்ரிக் மேல்நிலைப் பள்ளியில் வித்யாரம்பம் நிகழ்ச்சி

மாதவரம், அக்.22-

மாதவரம் தொகுதி சோழவரம் ஒன்றியம் நல்லூர் ஊராட்சி சோலையம்மன் நகரில் இயங்கிவரும் விவேகானந்தா மெட்ரிக் மேல்நிலைப் பள்ளியில் விஜயதசமி தினத்தை முன்னிட்டு வித்யாரம்பம் நிகழ்ச்சி மற்றும் புதிய மழலையர்களுக்கு கல்வி உபகரணங்கள் வழங்கும் நிகழ்ச்சி பள்ளி தாளாளர் மணிவண்ணன் தலைமையில் நடைபெற்றது.

பள்ளி செயலாளர் ஜெயலட்சுமி, முதல்வர் செல்வக்குமார், முதன்மை நிர்வாக அதிகாரி அருண்மொழிவர்மன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். நிகழ்ச்சியில் புதிதாய் சேர்ந்த மழலையர்கள் நெல்மணிகளில் “அ”கரம் எழுத வைத்து அ , ஆ சொல்ல வைத்தனர். புதிதாய் பள்ளியில் சேர்ந்த மழலையர்களுக்கு கல்வி உபகரணங்களை பெற்றுக் கொண்டு மனமகிழ்ச்சியுடன் சென்றனர். இதில் மழலையர்கள், பெற்றோர்கள், ஆசிரியர்கள் கலந்துகொண்டனர்.



## பாடியநல்லூர் ஆப்பிள் கிரிச் பிளே ஸ்கூலில் வித்யாரம்பம் நிகழ்ச்சி

மாதவரம், அக்.22-

மாதவரம் தொகுதி சோழவரம் ஒன்றியம் பாடியநல்லூர் எம்.ஏ. நகரில் இயங்கிவரும் ஆப்பிள் கிரிச் பிளே ஸ்கூலில் விஜயதசமி தினத்தை முன்னிட்டு வித்யாரம்பம் நிகழ்ச்சி மற்றும் புதிய மழலையர்களுக்கு கல்வி உபகரணங்கள் வழங்கும் நிகழ்ச்சியும் பள்ளி நிறுவனர் டாக்டர் ராஜேஸ்வரி- ரஞ்சித் தலைமையில் நடைபெற்றது. பள்ளியின் முதன்மை நிர்வாக அதிகாரி ரஞ்சித் முன்னிலை வகித்தார். நிகழ்ச்சியில் புதிதாய் சேர்ந்த மழலையர்கள் நெல்மணிகளில் “அ”கரம் எழுத வைத்து அ, ஆ சொல்ல வைத்தனர். புதிதாய் பள்ளியில் சேர்ந்த மழலையர்கள் கல்வி உபகரணங்களை பெற்றுக் கொண்டு மனமகிழ்ச்சியுடன் சென்றனர். இதில் பெற்றோர்கள், ஆசிரியர்கள் கலந்துகொண்டனர்.



## அருந்ததி கட்சி சார்பில் சமூகத்தின் சுதந்திரப் போராட்ட வீரமங்கை குயிலி 247-வது நினைவேந்தல் நிகழ்வு மற்றும் வீர வணக்கம் செலுத்தும் நிகழ்ச்சி

பல்லாவரம், அக்.22-

செங்கல்பட்டு மாவட்டம் பல்லாவரம் அருந்ததிபுரம் பகுதியில் அருந்ததி சமூகத்தின் வீரமங்கை குயிலி அவர்களின் 247-வது நினைவேந்தல் நிகழ்வு மற்றும் வீர வணக்க செலுத்தும் விழா அருந்ததி கட்சியின் சார்பில் நிறுவனர் பொதுச்செயலாளர் ப.தேவேந்திர ராவ் தலைமையில் சிறப்பாக நடைபெற்றது.

இந்த நிகழ்ச்சியில் சிறப்பு அழைப்பாளராக காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட கழகத் துணைச் செயலாளரும் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் இ.கருணாநிதி, பகுதி கழகச் செயலாளரும் 2வது மண்டல குழு தலைவர் இ.ஜோசப் அண்ணாதுரை, ஆகியோர் கலந்துகொண்டு சமூகத்தின் வீரமங்கை குயிலி அவர்களின் 247-வது நினைவேந்தல் நிகழ்வில் திருவுருவப்படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தி பின்னர் பொது மக்களுக்கு காலை சிற்றுண்டி வழங்கினார்கள்.

இந்த நிகழ்ச்சியில் அருள் ஒளி உலகின் முறை நல சங்கம் பொதுச்செயலாளர் டி.ஆனந்தராஜ், சமூக ஆர்வலர் ஏழுமலை, அருந்ததியர் மக்கள் நல சங்கம் நிறுவனர் வேடவாக்கம் சீனிவாசன், சமூக ஆர்வலர் செங்கை ஜெயராமன், அருந்ததி மக்கள் கட்சி வலசை ஜெய், தாம்பரம் மாநகர பிரதிநிதி என்.சி.கருணாமூர்த்தி, 13வது வார்டு மாமன்ற உறுப்பினர் ரேணுகாதேவி பரமசிவம், திமுக பிரமுகர் சன் வி.விஜயகுமார், சமூக ஆர்வலர்கள் எம். செங்குட்டுவன், டிஜி. லோகநாதன், தேமுதிக வட்டச் செயலாளர் சுகுமாரன், காஞ்சிபுரம் எஸ். சிவா, நெமிலி சீனிவாசன், அருந்ததி கட்சி நிர்வாகிகள் பல்லாவரம் சுரேஷ், அஸ்தினாபுரம் கிருஷ்ணன், கருங்குழி புஷ்பராஜ், உத்திரமேரூர் உமா, அனகை வெங்கடேசன், குடியாத்தம் ஷாஜகான், பல்லாவரம் பெஞ்சமின், திமுக மாணவரணி தணிகவேல் மற்றும் பல்வேறு சமூக அமைப்புகளின் நிர்வாகிகள், அருந்ததியர் கட்சியின் மாநில மற்றும் மாவட்ட நிர்வாகிகள், சமூக ஆர்வலர்கள், தொண்டர்கள் மற்றும் பொதுமக்கள் திரளாகக் கலந்து கொண்டு வீரமங்கை குயிலி திருவுருவப்படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தினார்கள்.



► மதுரை மாநகராட்சி, மண்டலம்-3, எல்லீஸ் நகர் 70 அடி ரோடு பகுதியில் மாநகராட்சி ஆணையாளர் கௌரவ் குமார், இ.ஆ.ப., , சாலையின் இருபுறங்களிலும் உள்ள கால்வாய்களை பார்வையிட்டு, கால்வாய்களை மழைநீர் செல்ல ஏதுவாக குப்பைகளை அகற்றி சீரமைத்திட அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

# 2-வது முறையாக 25,000 மெட்ரிக் டன் சன்ன ரக அரிசி விற்பனைக்கு வழங்கப்பட்டுள்ளது"- அமைச்சர் வெங்கடரமணன்

சென்னை, அக். 22-

"தமிழ்நாட்டில் மக்களிடம் கிடைக்கப்பெற்ற வரவேற்பு தொடர்ந்து கூட்டுறவுத்துறை அங்காடிகளில் இரண்டாவது முறையாக 25 ஆயிரம் மெட்ரிக் டன் சன்ன ரக அரிசி விற்பனைக்கு வழங்கப்பட்டுள்ளது" என உணவு மற்றும் குடியுரிமை பொருள் வழங்கல் துறை அமைச்சர் வெங்கடரமணன் கூறியுள்ளார்.



திருச்சி விமான நிலையத்தில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், "பருவமழை காலத்தில் விவசாயிகளுக்கு உதவிகரமாக செயல்பட தமிழக அரசு தயாராக உள்ளது. ரேஷன் கடைகளில் உணவுப்பொருட்கள் வழங்குவதை பொருத்தவரை குடும்ப அட்டைதாரர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும். முன்னுரிமை அல்லாத குடும்ப அட்டைதாரர்கள் அரிசி அல்லது சர்க்கரை என அவர்களுக்கு எது தேவையோ அதை வாங்கிக் கொள்ளலாம். தற்போது முன்னுரிமை அல்லாத குடும்ப அட்டைதாரர்கள், பொருட்கள் பெறாதோர் என மூன்று பிரிவுகளாக அட்டைகள் வழங்கப்பட்டுள்ளன

கூட்டுறவுத்துறை அங்காடிகளில் கிலோ ரூ.30 சன்னரக அரிசி விற்பனை மக்களிடம் வரவேற்பு பெற்று நன்றாக நடைபெற்று வருகிறது. அதாவது 25 ஆயிரம் மெட்ரிக் டன் விற்பனைக்கு வழங்கப்பட்டது. அனைத்தும் விற்பனை ஆகிவிட்டது. இரண்டாவது முறையாக 25 ஆயிரம் மெட்ரிக் டன் விற்பனைக்கு வழங்கப்படவுள்ளது. அரிசி உட்பட அத்தியாவசியப் பொருட்கள் விலை உயர்வு விரைவில் குறையும்.

முன்னாள் அமைச்சர்கள் கே.என்.நேரு ரேஷன் அரிசி உட்கொள்வதாக தெரிவித்துள்ளார், அவர் இதற்கு முன் பலமுறை அமைச்சராக சட்டமன்ற உறுப்பினராக செயல்பட்டவர் அவரிடம் ரேஷன் பொருட்கள் விநியோக நிலவரம் குறித்து நாம் கேட்டிருக்க வேண்டும்." என்றார்.

அதேபோல், முன்னாள் அமைச்சர் கே.என்.நேரு வெள்ள பாதிப்பு எதிர்கொள்ள தேவையான நடவடிக்கைகள் திமுக ஆட்சியில் மேற்கொண்டுள்ளதாக கூறி வருகிறார் என்ற கேள்விக்கு, "அவர் தங்கள் ஆட்சியில் நடவடிக்கையை மேற்கொள்ளப் பட்டதாக கூறினால் கூறிக் கொள்ளட்டும். தமிழக வெற்றிக் கழக ஆட்சியைப் பொறுத்தவரை பேச்சைக் காட்டிலும் செயலில் நடவடிக்கை எடுப்பதை வழக்கமாகக் கொண்டுள்ளோம்

எதிர்க்கட்சிகள், முதல்வர் குறித்து அவதூறு கருத்துக்கள் தெரிவித்த வருகின்றனர். அதனை மக்களும் கவனித்து கொண்டு உள்ளனர். அவதூறு கருத்துக்கள் வரம்பை மீறி பேசுவோர் மீது தக்க நடவடிக்கைகள் எடுக்கப்ப டும்." என்று அமைச்சர் வெங்கட்ரமணன் தெரிவித்தார்.






# "கடமையின் பாதையில் இன்னுயிர் நீத்தோருக்கு அஞ்சலி" - காவலர் வீரவணக்க நாளில் முதல்வர் விஜய் பதிவு

சென்னை, அக். 22-

"கடமையின் பாதையில் இன்னுயிர் நீத்து, அமரர்களான வீரத் தியாகிகளுக்குத் தலைவணங்கி அஞ்சலி செலுத்துவதோடு, காலநேரம் கருதாமல், அயராது உழைத்து, நாட்டின் அரணாகத் திகழும் காவல் துறையினரின் உன்னதப் பணிகளைப் போற்றிடுவோம்." என காவலர் வீரவணக்க நாளில் முதல்வர் விஜய் பதிவிட்டுள்ளார்.

இது தொடர்பாக முதல்வர் விஜய் வெளியிட்டுள்ள பதிவில், "1959-ஆம் ஆண்டு லடாக் எல்லைப் பகுதியில் தாய்நாட்டைக் காப்ப தற்காக வீரமரணமடைந்த 10 மத்திய ரிசர்வ் காவல் படைக் காவலர்களின் வரலாற்றுச் சிறப்புமிக்க தியாகத்தைப் போற்றும் காவலர் வீரவணக்க நாளில், நாட்டில் அமைதியையும், சட்டம்-ஒழுங்கையும் நிலைநாட்டும் உயரிய கடமையில் தங்களது இன்னுயிரைத் தியாகம் செய்த காவல் துறையினர் அனைவருக்கும் வீர வணக்கங்கள்!

இயற்கைப் பேரிடர்கள், விபத்துகள், குற்றச் சம்பவங்கள், பொதுமக்களின் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தல் ஏற்படும் சூழல்கள் எனப் பல்வேறு சவால்களை எதிர்கொண்டு, துணிவுடனும், விழிப்பு டனும் பணியாற்றும் காவலர்களின் அர்ப்பணிப்பு போற்றுதலுக்குரியது.

கடமையின் பாதையில் இன்னுயிர் நீத்து, அமரர்களான வீரத் தியாகிகளுக்குத் தலைவணங்கி அஞ்சலி செலுத்துவதோடு, காலநேரம் கருதாமல், அயராது உழைத்து, நாட்டின் அரணாகத் திகழும் காவல் துறையினரின் உன்னதப் பணிகளைப் போற்றிடுவோம்." எனக் குறிப்பிட்டுள்ளார்.

# கனமழை எதிரொலி: சுருளி அருவியில் சுற்றுலா பயணிகள் குளிக்கத் தடை விதிப்பு

தேனி, அக்.22-

தேனி மாவட்டம் சுருளி வனப்பகுதியில் பெய்துவரும் கனமழை காரணமாக சுருளி அருவியில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது. தேனி மாவட்டத்தில் கடந்த 15ஆம் தேதி முதல் வடகிழக்கு பருவமழை தீவிரமடைந்துள்ளது. குறிப்பாக கம்பம், கூடலூர் மற்றும் சுற்றியுள்ள பகுதிகளில் கடந்த இரண்டு நாட்களாக நல்ல மழை பெய்து வருகிறது.

மேலும், மேற்குத் தொடர்ச்சி மலையில் அமைந்துள்ள சுருளி வனப்பகுதியில் பெய்த கனமழையின் காரணமாக சுருளி அருவியில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது. அருவியில் வெண்மை நிறத்திற்கு பதிலாக செம்மண் மற்றும் கற்கள் அடித்து வரப்படுவதால், தண்ணீர் ஆக்ரோஷமாக ஆர்ப்பரித்து கொட்டுகிறது.

இதன் காரணமாக, சுற்றுலா பயணிகள் பாதுகாப்பு நலன் கருதி சுருளி அருவியில் குளிக்க வனத்துறையினர் தடை விதித்துள்ளனர். மழையின் அளவு குறைந்து நீர்வரத்து சீரான பிறகே சுற்றுலா பயணிகள் அருவியில் குளிக்க அனுமதிக்கப்படுவார்கள் என வனத்துறையினர் அறிவித்துள்ளனர்.



# டெல்லியில் ராவணனுடன் சேர்த்து 30 அடி கரப்பான் பூச்சி உருவ பொம்மை எரிப்பு

புதுடெல்லி, அக்.22-

விஜயதசமியை முன்னிட்டு, வழக்கமான ராவணன், கும்பகர்ணன் மற்றும் மேகநாதன் உருவப் பொம்மைகளுடன் சேர்த்து டெல்லி பிதம்பராவில் 30 அடி உயர கரப்பான் பூச்சி உருவபொம்மையும் நேற்று எரிக்கப்பட்டது.

சிஜேபி-க்கு எதிரான கேலி நடவடிக்கையாகவே இது பார்க்கப்படுகிறது. கரப்பான்பூச்சி உருவபொம்மையை எரிப்பதுபோன்ற வீடியோ பரவிவருகிறது. இதுகுறித்து சிஜேபி நிறுவனர் அபிஜித் திப்கே மற்றும் சட்டப்பிரிவு தலைவர் ரத்னாசிங் கூறும்போது,"இலவச விளம்பரத்துக்கு நன்றி.

இந்த நாட்டில் வெறும் கூத்துகளை மட்டுமே நடத்திக் கொண்டிருங்கள்" என்று குறிப்பிட்டுள்ளனர். இக்கருத்துகள் சமூகவலைதளங்களில் விவாதங்களை ஏற்படுத்தியுள்ளன. பல பயனர்கள் கரப்பான் பூச்சி உருவப் பொம்மை எரிப்பை தீமையின் மீதான நன்மையின் வெற்றியோடு ஒப்பிட்டுப் பேசிவருகின்றனர்.

# காவலர் வீரவணக்க நாள்: உயிர்த் தியாகம் செய்த காவலர்களுக்கு டி.டி.வி. தினகரன் வீரவணக்கம்!



சென்னை, அக். 22-

கடமையை உயிர்மூச்சாகக் கொண்டு, நாட்டின் அமைதி யையும் பொது மக்களின் பாதுகாப்பையும் உறுதி செய்வதற்காகத் தங்களின் இன்னுயிரைத் தியாகம் செய்த காவலர்களின் அளப்பரிய பணியையும் அர்ப்பணிப்பு உணர்வையும் நினைவுகூரும் காவலர் வீரவணக்க நாள் இன்று அனுசரிக்கப்படுகிறது என டி.டி.வி. தினகரன் தெரிவித்துள்ளார். இதையொட்டி, குடும்பத்தைப் பிரிந்து, உயிரைப் பணயம் வைத்து, சட்டம் ஒழுங்கைப் பாதுகாக்கும் பணியில் ஈடுபட்டு, நாட்டிற்காகத் தங்களின் இன்னுயிரை நீத்த காவலர்கள் அனைவருக்கும் வீரவணக்கம் செலுத்துவோம். இக்கட்டான சூழல்களிலும் இரவு பகலாக உழைத்து, மக்களின் பாதுகாப்பு அரணாகத் திகழும் காவல்துறையினரின் அரும்பெரும் பணிகளைப் போற்றி வணங்குவோம் என அமமுக பொதுச்செ யலாளர் டி.டி.வி. தினகரன் தெரிவித்துள்ளார்.

# திருநங்கைளுக்கு அரசுப் பணியில் இடம் வழங்க உச்ச நீதிமன்றம் நோட்டீஸ்

புதுடெல்லி, அக்.22-

ஆசிரியர் காலிப்பணியிடங்களுக்கு திருநங்கைகள் விலக்கப்பட்டு, இருநிலை பாலினத்தவர் மட்டுமே விண்ணப்பிக்க அனுமதித்த டெல்லி கல்வி இயக்குநரகம் மற்றும் டெல்லி துணைநிலை சேவைகள் தேர்வு வாரியம் வெளியிட்ட அறிவிப்புகளை எதிர்த்து ஜேன் கவுஷிக் மற்றும் பிரவீன் சிங் ஆகியோர் உச்ச நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்தனர். இந்த மனுக்கள் நீதிபதிகள் ஜெ.பி. பர்திவாலா மற்றும் நீதிபதி கே. வினோத் சந்திரன் அமர்வில் விசாரணைக்கு வந்தது. அப்போது நீதிபதிகள் பிறப்பித்த உத்தரவில் கூறப்பட்டுள்ளதாவது: அரசுப் பணி நியமனங்களுக்கான ஆட்சேர்ப்பு அறிவிப்பு ஏன் ஆண் மற்றும் பெண் பிரிவினருக்கானதாக வருகிறது? பாலின அடிப்படையில் காலிப்பணியிடங்களை அறிவிப்பதற்கான சட்டப்பூர்வ அடிப்படை என்ன?

பொது ஆட்சேர்ப்பில் காலிப் பணியிடங்களை அறிவிக்க பாலினத்தை அடிப்படையாகப் பயன்படுத்துவதற்கான ஆதாரம் என்ன? ஆசிரியர் காலிப்பணியிட அறிவிப்புகளில் மூன்றாம் பாலினத்தவரைச் சேர்க்க முன்மொழிகிறார்களா? அரசுப் பணியில் திருநங்கைகளுக்கு எவ்வாறு இடமளிக்கப்படும்? இந்த கேள்விகளுக்கான பதிலை டெல்லி அரசு விரிவாக தாக்கல் செய்ய வேண்டும். இவ்வாறு அந்த உத்தரவில் கூறப்பட்டுள்ளது.

# இந்தியா, அமெரிக்கா வர்த்தக ஒப்பந்தம் முற்றிலும் மாறுபட்டதாக இருக்கும்" - ட்ரம்ப்



இந்தியா, அக். 22-

வாஷிங்டன்: இந்தியா, அமெரிக்கா இடையேயான வர்த்தக ஒப்பந்தம் விரைவில் இறுதி செய்யப்படும் எனத் தெரிவித்துள்ள அமெரிக்க அதிபர் டொனால்டு ட்ரம்ப், இந்த ஒப்பந்தம் முற்றிலும் மாறுபட்டதாக இருக்கும் எனக் குறிப்பிட்டுள்ளார்.

இந்தியா, அமெரிக்கா இடையே வர்த்தக ஒப்பந்தம் மேற்கொள்வதற்கான பேச்சவார்த்தை தொடர்ந்து மேற்கொள்ள ப்பட்டு வருகிறது. இது தொடர்பாக இந்த மாத தொடக்கத்தில் அமெரிக்கா சென்ற மத்திய வர்த்தக அமைச்சர் பியூஷ் கோயல், அமெரிக்க வர்த்தக பிரதிநிதி ஜேமிசன் கிரீரை சந்தித்து, ஒப்பந்தம் தொடர்பான நுணுக்கமான அம்சங்கள் குறித்து விவாதித்தார்.

நேற்று இந்தியா வந்த அமெரிக்க வெளியுறவு அமைச்சர் மார்கோ ரூபியோ, அமெரிக்கா, இந்தியா இடையே விரைவில் வர்த்தக ஒப்பந்தம் கையெழுத்தாகும் என்று கூறினார்.

மும்பையில் செய்தியாளர்களிடம் பேசிய மார்கோ ரூபியோ, "அமெரிக்கா, இந்தியா இடையே வர்த்தக ஒப்பந்தத்தை இறுதி செய்ய பேச்சுவார்த்தை நடத்தப்பட்டு வருகிறது. சில விஷயங்களில் கருத்து வேறுபாடுகள் நிலவுகின்றன.

அவை களையப்படும். வெகு விரைவில் அமெரிக்கா, இந்தியா இடையே வர்த்தக ஒப்பந்தம் கையெழுத்தாகும்.

பல்வேறு நாடுகளில் இருந்து கச்சா எண்ணெயை இந்தியா கொள்முதல் செய்து வருகிறது. இது மிகச் சிறந்த வணிக நடவடிக்கை ஆகும். கச்சா எண்ணெய் சுத்திகரிப்பு துறையில் இந்தியா "சூப்பர் பவராக" உருவெடுத்திருக்கிறது. வெனிசுலா நாட்டின் கச்சா எண்ணெயை இந்திய நிறுவனங்களுக்கு வழங்க தயாராக உள்ளோம்." என்று தெரிவித்தார்.

இந்நிலையில், வெள்ளை மாளிகையில் உள்ள ஓவல் அலுவலகத்தில் செய்தியாளர்களிடம் பேசிய அமெரிக்க அதிபர் டொனால்டு ட்ரம்ப், "அமெரிக்காவுடன் வர்த்தக ஒப்பந்தம் மேற்கொள்ள இந்தியா விரும்புகிறது. நாங்களும் இதை விரும்புகிறோம். ஒப்பந்தம் கையெழுத்தாவதற்கு மிக நெருக்கத்தில் இருக்கிறோம். அமெரிக்கா இதுவரை செய்த ஒப்பந்தங்களில் இருந்து இது முற்றிலும் மாறுபட்டதாக இருக்கும்." என தெரிவித்துள்ளார்.



# தமிழகம் முழுவதும் கோலாகலமாக நடைபெற்ற வித்யாரம்பம் நிகழ்ச்சி!

தமிழ்நாட்டின் பல்வேறு ஊர்களில் உள்ள கோயில்கள் மற்றும் தனியார் பள்ளிகளில் விஜயதசமியை முன்னிட்டு வித்யாரம்பம் நிகழ்ச்சி கோலாகலமாக நடைபெற்றது.

இதில், புதிதாகக் கல்வி கற்கத் தொடங்கும் ஏராளமான குழந்தைகள் பங்கேற்று, தங்களது கல்விப் பயணத்தைத் தொடங்கினர்.

தர்மபுரியில், 25-வது ஆண்டாக கேரளம் சமாஜம் சார்பில் பள்ளிக்குச் செல்லவிருக்கும் குழந்தைகளுக்கு எழுத்தறிவித்தல் நிகழ்ச்சி நடைபெற்றது. இதில், குழந்தைகளின் நாவில் தங்க எழுத்தாணியால் எழுதி ஆசீர்வதிக்கப்பட்டது.

நாகர்கோவிலில் உள்ள வனமாலீஸ்வரர் கோயிலில் நடைபெற்ற வித்யாரம்பம் நிகழ்ச்சியில், அரிசி மற்றும் நெல்லில் குழந்தைகளின் கைகளைப் பிடித்து, பெற்றோர்கள் 'அ' என்ற எழுத்தை எழுத வைத்தனர்.

மதுரையில் உள்ள தனியார் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளியில் குழந்தைகளுக்கான வித்யாரம்பம் நிகழ்ச்சி நடைபெற்றது. இதேபோல், திருவண்ணாமலை மாவட்டம் முழுவதும் உள்ள 2,143 அங்கன்வாடி மையங்களில் விஜயதசமியை முன்னிட்டு முன்பருவக் கல்விச் சேர்க்கை தொடங்கப்பட்டது.

சேரியந்தல் கிராமத்தில் உள்ள அங்கன்வாடி மையத்தில் குழந்தைகளின் கைகளைப் பிடித்து, அரிசியில் 'அ' என்ற எழுத்தை எழுத வைத்து அவர்களின் கல்விப் பயணம் தொடங்கி வைக்கப்பட்டது.

கும்பகோணத்தில் உள்ள தனியார் பள்ளி ஒன்றில், நவதானியங்களில் குழந்தைகளின் கைகளைப் பிடித்து தமிழ் உயிரெழுத்துகளை எழுத வைத்தனர்.

கன்னியாகுமரி மாவட்டம், திருவட்டாரில் உள்ள ஆஞ்சநேயர் கோயிலில் நடைபெற்ற வித்யாரம்பம் நிகழ்ச்சியில் நூற்றுக்கணக்கான குழந்தைகள் பங்கேற்றனர்

இதேபோல், சிவகாசி, கரூர், திருவாரூர், திருநெல்வேலி, கடலூர் உள்ளிட்ட தமிழகத்தின் பல்வேறு பகுதிகளிலும் வித்யாரம்பம் நிகழ்ச்சி விமரிசையாக நடைபெற்றது. குழந்தைகள் கல்வியில் சிறந்து விளங்க வேண்டி பெற்றோர்களும் பொது மக்களும் வழிபாடுகளில் ஈடுபட்டனர்.

# கடந்த கால ஆட்சியாளர்களின் அலட்சியமே இன்றைய மின் தட்டுப்பாட்டுக்கு காரணம்" - எம்.பி துரை வைகோ

திருச்சி, அக். 22-

"கடந்த கால ஆட்சியாளர்கள் மின் உற்பத்திக்கு தேவையான கட்டமைப்புகளை நமது மாநிலத்தில் சரியாக பராமரிக்க தவறியதே இன்று நம் மாநிலத்தில் மின் தட்டுப்பாட்டிற்கு காரணம்" என எம்.பி துரை வைகோ குற்றம்சாட்டியுள்ளார்.

திருச்சி விமான நிலையத்தில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், "உள்ளாட்சித் தேர்தல் பொறுத்தவரை நீதிமன்றத்தில் ஒரு வழக்கு இருந்தது, தற்போது தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது. விரைவில் உள்ளாட்சித் தேர்தல் மற்றும் மீதமுள்ள தொகுதிகளுக்கான இடைத்தேர்தல் நடைபெறும்

தமிழகத்தை பொறுத்தவரை மின்சாரத்துறை உள்ளிட்ட பல துறைகளுக்கு கூடுதல் நிதி தேவைப்படுகிறது. ஏற்கெனவே தமிழக அரசுக்கு சுமார் 13 லட்சம் கோடி ரூபாய் வரை கடன் சுமை உள்ளதால், எடுத்தவுடனேயே அதை குறைப்பதற்கான வாய்ப்புகள் இல்லை. இருப்பினும், துறை சார்ந்த அமைச்சர் இதுகுறித்து விளக்கம் அளித்துள்ள நிலையில், அது குறித்த விவரங்களை ஆராய வேண்டும். டெண்டர் முறைகேடுகள் இந்த ஆட்சியில் முற்றிலுமாகக் குறைந்துள்ளது. இது வருங்காலத்தில் தமிழ்நாட்டின் கடன் சுமையைக் குறைக்கும்.

சென்னையில் மழை வெள்ளப் பணிகளுக்காக கடந்த அரசு தரப்பில் 4,000 கோடி ரூபாய் செலவிடப்பட்டதாக கூறப்பட்டாலும், அது சரியான முறையில் திட்டமிடப்பட்டு செயல்படுத்தப்பட்டுள்ளதா என்ற கேள்வி எழுகிறது. ஏறக்குறைய 24 கிலோ மீட்டர் தொலைவுக்கு மழைநீர்க் கால்வாய் வெட்டப்பட்டாலும், அதனை மற்ற கால்வாய்களுடன் இணைக்கும் பணிகள் முழுமையாக மேற்கொள்ளப்படாததால் அவை வீணாகும் நிலை ஏற்பட்டுள்ளது. இதுபோன்று பல இடங்களில் இந்த



பிரச்சினை உள்ளது.

கடந்த ஐந்து வருடத்தில் இவர்கள் (திமுக) என்ன செய்தார்கள் என தெரியவில்லை. மேலும், நிவாரணப் பணிகளில் அரசு ஊழியர்கள் மற்றும் அமைச்சர்கள் களத்தில் நின்றனர். இதுபோன்ற நேரங்களில் உள்ளாட்சி அமைப்புகள் தான் களத்தில் நிற்க வேண்டும். ஆளுங்கட்சியின் கவுன்சிலர்கள், மேயர் மற்றும் துணை மேயர் ஆகியோர் உரிய முறையில் களத்திற்கு சென்று பொதுமக்களை சந்திக்க வில்லை. 15 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மாநகராட்சிப் பணியாளர்கள், அமைச்சர்கள் களத்தில் இருக்கும் பொழுது, கவுன்சிலர்கள் களத்தில் இல்லாததற்கு அரசியல் தான் காரணம்.

கடந்த 20 முதல் 25 ஆண்டுகளாக மின் கட்டமைப்பில் முந்தைய அரசுகள் உரிய நடவடிக்கைகளை எடுக்காததே தற்போதைய மின் தட்டுப்பாட்டிற்கு முக்கிய காரணம். குறிப்பாக, உப்பூர் மின் திட்டத்திற்காக 13,000 கோடி ரூபாய் செலவிடப்பட்டு, அதில் 6,000 கோடி ரூபாய்க்கு வாங்கப்பட்ட உபகரணங்கள் உரிய பராமரிப்பு இல்லாமல் உப்புக்காற்று பட்டு வீணாகிவிட்டது. வரும் 5 ஆண்டுகளில் இந்த சீர்கேடுகளை சரி செய்து மின்சார தேவையை பூர்த்தி செய்ய வேண்டியது தற்போதைய அரசின் கடமை.

அரசியல் ரீதியாக எதிர் தாக்குதல், கருத்தியல் ரீதியான மாற்று கருத்து கூறுவது ஜனநாயகத்தின் அடிப்படை. அதேவேளையில் தனி மனித தாக்குதல், கொச்சைபடுத்திப் பேசுவது, இரட்டை அர்த்தத்தில் பேசுவது இது போன்ற விஷயங்கள் ஏற்புடையதல்ல. நாம் தமிழர் வேட்பாளர் சட்டம் - ஒழுங்கை சீர்குலைக்கும் வகையில் செயல்பட்டிருந்தால் கண்டிப்பாக நடவடிக்கை எடுக்க வேண்டும்.

ஜனநாயக நாட்டில் யார் வேண்டுமானாலும் அரசியல் கட்சி தொடங்கி தேர்தலில் போட்டியிடலாம். நடிகர் தனுஷ் கட்சி தொடங்குவதில் எந்தத் தவறும் இல்லை, அது அவரவர் உரிமை. இறுதி முடிவை எப்போதும் மக்கள் மட்டுமே தீர்மானிப்பார்கள்" என எம்.பி துரை வைகோ தெரிவித்தார்.

Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at "SRI SAAI PRINTERS"No.122,Neethipathi, Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161